**தலைப்பு 16 – பாராளுமன்றம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன பராளுமன்றத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 16 - பாராளுமன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி பாராளுமன்றத்தின் பிரதம செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி நடவடிக்கைகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படாமை. | 2.1.3 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகளை திட்டமிடுவதிலான குறைபாடுகள் | 2.2.1 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்படாமை. | 2.9 மற்றும் 2.10 |
| | | 2. | தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.6 |
| | | 3. | பதவியணியை பயிற்றுவிப்பதிலான குறைபாடுகள் | 2.11 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான | 1. | பாராளுமன்றத்தின் கூட்டங்களுக்கான மதிப்பிற்குரிய அமைச்சரிகளின் பங்களிப்பு | 2.1.1 |
| | | 2. | செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு தகவல்கள் முன்வைக்கப்படாமை. | 2.1.2 |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 3. செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படாமை. | 2.1.4 |
| | | 4. பெறுகை நடைமுறையிலான குறைபாடுகள். | 2.2.2 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | 1. நிதியேற்பாடுகளை மிகைத்து பொறுப்புகள் ஏற்படுத்தப்படல். | 2.4 |
| | | 2. மிகை நிதியேற்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தமை. | 2.7(அ) |
| | | 3. நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை. | 2.7(ஆ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதிலான குறைபாடுகள். | 2.8(அ) |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப் | நட்டங்கள் தொடர்பான பொறுப்பு | 2.5 |

பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 செயலாற்றல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 2.1.1 பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள்

---

2017 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந்திகதி வரையிலும் 08 ஆவது பாராளுமன்றத்தின் 95 கூட்டத்தடவைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 95 கூட்டத்தடவைகளில் 43 கூட்டத்தடவைகளுக்காக 225 மாண்புமிகு அமைச்சர்களில் 150 அமைச்சர்களை விட அதிகமானோர் பங்குபற்றியிருந்தனர். 52 கூட்டத்தடவைகளுக்காக 150 பாராளுமன்ற அமைச்சர்களை விட குறைவானோர் பங்குபற்றியிருந்தனர். மேலும், 200 மாண்புமிகு அமைச்சர்களை விட அதிகமான பங்குபற்றலுடன் 04 கூட்டத்தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தனர்.

#### 2.1.2 பொறியியல் பிரிவின் பணிகள்

---

பாராளுமன்றத்தின் பணிகளுக்காக பொறியியல் பிரிவு காணப்பட்ட போதிலும், அந்த பிரிவின் செயலாற்றல் அளவிட்டுப் பார்ப்பதற்கு தேவையான தரவுகள் அந்தப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அந்தப் பிரிவின் கீழான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் எழுத்துமூல பணி ஒப்படைப்புக்கள் பேணப்பட்டிராமை, பொறியியல் பிரிவின் உத்தியோகத்தர்களால் களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் தொடர்பான தகவல்கள் பேணப்படாமை, நாள்தோறும் பொறியியல் பிரிவிலிருந்து விலகிச் செல்லும் உத்தியோகத்தர்கள் எந்தப் பணிக்காக வெளியேறிச் செல்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்கள் பேணப்பட்டிராமை, சீ.சீ.ரீ.வி பிரிவிற்கு மற்றும் சபாநாயகரின் உத்தியோகபூர்வ

இல்லத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக கடமைகளுக்காக களஞ்சியத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் தொடர்பான தகவல்கள் பேணியிராமை போன்ற பல்வேறு குறைபாடுகள் நிலவின.

**2.1.3 திட்டமிடல்**

2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் வருடாந்த செயலாற்றலுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் (Imprest Requirement Plan) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.4 செயன்முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல்**

செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிராமையால், செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயன்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

**2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்**

**2.2.1 பெறுகையினை திட்டமிடுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டிக்கமைய தயாரிக்கப்பட வேண்டிய 03 வருட காலத்திற்கான உத்தேசிக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான பெறுகைகள் திட்டம் பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான உத்தேச பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த திட்டம் 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) எழுதுகருவி மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் மற்றும் உணவு மற்றும் சீருடை செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 150 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அந்த மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் வருடாந்த பெறுகைகள் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 வழிகாட்டிகளுக்கமைய பெறுகைகள் கால அட்டவணைகள் பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்பட்டிருக்காமையால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.1(ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் பெறுகைகள்குழுக் கூட்டங்களை நடாத்தி உரிய காலப்பகுதியினுள் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்துவதற்கு போதுமான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாராளுமன்றத்தின் சபை மண்டபத்திற்கு ஒலிபரப்பு தரத்திலான சீ.சீ.ரீ.வீ கெமரா கட்டமைப்பொன்றினை வழங்குதல், நிறுவுதல், பரிசோதித்துப் பார்த்தல் மற்றும் செயற்படுத்திக் காட்டுதல் ஆகியவற்றுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல்

- கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் செலவின விடயத்தின் கீழ் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் முறையே ரூபா 500 மில்லியன் மற்றும் ரூபா 160 மில்லியன் எனுமாறு ரூபா 660 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளில் மேற்குறிப்பிடப்பட்ட பணிக்காக 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூபா 106 மில்லியன் மற்றும் ரூபா 122 மில்லியன் எனுமாறு ரூபா 228 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் வழிகாட்டிக்கமைய இந்த பெறுகைக்காக மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 200 மில்லியனை விஞ்சிய இந்த பெறுகை நடவடிக்கைகள் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 மற்றும் 2.8.2 வழிகாட்டிக்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவொன்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்றினாலும் மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அவ்வாறு அல்லாது அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவான்றினால் விலைக்கேள்வி கோரல் மற்றும் விலைக்கேள்வி திறத்தல், தொழில்நுட்ப முன்மொழிவு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பரிந்துரைகள் வழங்குதல், விலைக்கேள்வி ஆவணங்களை மதிப்பிடல், ஒரு விலைக்கேள்வியை நிராகரித்தல் மற்றும் எஞ்சிய இரு நிறுவனங்களினதும் நிதி முன்மொழிவுகளையும் திறத்தல் போன்ற பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. எனினும், 2016 யூலை 23 ஆந் திகதிய PFD/PMD/03/97 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய இந்த பெறுகையின் கிரய மதிப்பீடானது ரூபா 200 மில்லியனை விஞ்சுகின்றமையால் அதற்கு தேவையான பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கு தற்பொது பெயரிடப்பட்டுள்ள அமைச்சின் பெறுகைகள் குழுவினூடாக இந்த பெறுகை நடைமுறையை முன்னெடுத்துச் செல்ல முடியாதென குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி அமைச்சின் பெறுகைகள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்தக் குழுவினால் அமைச்சின் பெறுகைகள் குழு வழங்கியிருந்த மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்களை மாற்றஞ் செய்யாது அதன்படியே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

(iii). 120 LED தொலைக்காட்சி இயந்திரங்கள் ரூபா 8.375 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கும், தொலைக்காட்சி இயந்திரங்களை பொருத்தும் செலவினம் ரூபா 575,000 தொகை 2017 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத் திகதி வரையிலும் அவ்வாறு பொருத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த தொலைக்காட்சி இயந்திரங்களின் சுவர் பொருத்திகளுடனான (Wall Brackets) 29 தொலைக்காட்சி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(iv). பெறுகைக் குழுவினால் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 124 LED தொலைக்காட்சி இயந்திரங்களினுள் உரிய அமைப்புக் குறியீடுகளுக்கு அமைவானதல்லாத தொலைக்காட்சி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் அவற்றை சான்றுறுதிப்படுத்தும் போது, அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.3 வழிகாட்டிக்கமைவாக அமைப்புக் குறியீடுகளிலான வேறுபாடுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(v). விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கமைய இந்தக் கட்டமைப்பினை விநியோகித்தல் மற்றும் பொருத்துதல் பாராளுமன்றத்திற்கு கையளித்தல் போன்ற பணிகளின் பின்னர் அது தொடர்பில் பாராளுமன்றத்தின் முதல்வர் திருப்தி கொள்வாராயின் மாத்திரம் ஒப்பந்தப் பெறுமதியில் 75 சதவீதத்தை செலுத்த முடியுமென குறிப்பிடப்பட்டிருந்தது. தொழிலாரம்பிப்பு முற்பணமாக 20 சதவீதமான ரூபா 17,458,723 தொகை 2016 திசெம்பர் 30 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய ஏற்பாடுகளுக்கு முரணாக, பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் உள்நாட்டு வழங்கல்களிலிருந்து கிடைத்த அளவிற்கான பெறுமதியில் (Supply items of the site) 75 சதவீதமான ரூபா 21,701,519 தொகையும், மீண்டும் அந்த திகதியே மற்றுமொரு கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(vi). ஒப்பந்ததாரரால் கட்டமைப்பு நிறுவப்பட்டு 03 வருடங்கள் வரை பராமரிப்பு பணிகளை இலவசமாக மேற்கொள்வதாக விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் நிபந்தனைகள் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 03 வருடங்களின் பின்னர் நிகழக்கூடிய பராமரிப்பு பணிகள் மற்றும் வருடாந்த சேவைப்படுத்தல்கள் தொடர்பில் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(vii). விலைக்கேள்வி நிர்ணயங்களின் பிரகாரம், இந்தக் கட்டமைப்பை நிறுவும் பணிகள் வார நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 16.45 வரை மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், வார இறுதி நாட்கள் மற்றும் இரவு நேரங்களாக 14 நாட்கள் இந்தப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக ஆவணங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறு உள்ள போது வார இறுதி நாட்கள் மற்றும் இரவு வேளைகளில் சேவையாற்ற முடியாமை தொடர்பிலான காரணங்களை குறிப்பிட்டு ஒப்பந்தக் காலத்தை நீடிப்பு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கைகள் முறையான விசாரணையொன்றில்லாது பிரதான இணைப்புப் பொறியியளாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(viii). இந்த கட்டமைப்பின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத போதிலும், கட்டமைப்பின் பணிகள் நிறைவு செய்யப்பட்டதை பொறியியல் பிரிவின் உத்தியோகத்தர்கள் சான்றுறுதிப்படுத்தாமையால் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடக்கூடியதாக இருந்த 5 சதவீதமான தாமதக் கட்டணங்களான ரூபா 11.4 மில்லியனை அறவிட முடியாதிருந்தது.

(ix). 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 2, 8 மற்றும் 12 ஆம் பிரிவுகளுக்கமைய பொது ஒப்பந்தப் பதிவாளருக்கு முன்வைக்கப்பட்ட விலைக்கேள்வியாளர் மற்றும் ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அவ்வாறு பதிவு செய்ததாக சான்றிதலொன்றை முன்வைக்காத ஒப்பந்தக்காரர்களுடன் குறித்த ஒப்பந்தம் தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் மேற்கொள்ளப்படக் கூடாத போதிலும், இந்த ஒப்பந்தம் தொடர்பில் அந்த ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாராளுமன்றத்தின் போக்குவரத்து பணிகளுக்காக 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 67.51 மில்லியன் செலவிடப்பட்டு 06 பேரூந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 வழிகாட்டிக்கமைய இந்த பெறுகைக்காக மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.3 வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வி மதிப்பீட்டு பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுகைகள் குழுவின் அங்கத்தவர்களால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கமைய உரிய முறையில் கையொப்பமிடப்பட்டிராததுடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கேள்வி கோரல் ஆவணமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.13 ஆம் வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வியாளர்களுக்கு விலைக்கேள்வி காப்பீடு தொடர்பான சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிராததுடன், அதன் காரணமாக விலைக்கேள்வியாளரால் அனுப்பப்பட்ட ஒன்றிக்காத காப்பீட்டுடனான கூறுவிலைகளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(ii). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2 வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு முரணாக விலைக்கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிராததுடன், குறித்த பேரூந்துகள் பௌதீகப் பரிசோதனையின் பின்னர் ஒரு விலைக்கேள்வியாளரிடம் மாத்திரம் இரு பயணிகள் தரவுகளுடனான 50 ஆசனங்களையுடைய வளிச்சீராக்கப்பட்ட பேரூந்துகளுக்காக மீண்டும் கூறுவிலைகளுடனான அமைப்புக் குறியீடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், குறித்த விலைக்கேள்வியாளரிடம் பேரூந்துகளின் இருப்பொன்று இல்லாதிருந்த காரணத்தால் மீண்டும் கூறுவிலைகளை கோருவதற்கு 09 நிறுவனங்களுக்கு விலைக்கேள்வி அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

(iii). தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைகள் குழுவினால் விலைக்கேள்வி மதிப்பீடு செய்யும் போது, அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.18 வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மூன்று பெறுகை சந்தர்ப்பங்களிலும் விலைக்கேள்விகளின் வரியுடனான விலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக முதலாவது பெறுகைச் சந்தர்ப்பத்தில் விலைக்கேள்வி மதிப்பீடு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் வரியற்ற ஆகக்குறைந்த விலையுடனான விலைக்கேள்வியைச் சமர்ப்பித்த ரூபா 15,467,544 தொகையான விலைக்கேள்வி, இரண்டாவது ஆகக் குறைந்த விலையாகவும், வரியுடனான ஆகக்குறைந்த விலைக்கேள்வியை சமர்ப்பித்திருந்த ரூபா 16,650,000 தொகையான விலைக்கேள்வி ஆகக்குறைந்த கூறுவிலையாகவும் தவறுதலாக இனங்காணப்பட்டிருந்தது.

(iv). பேரூந்துகளை பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தாது, ஆகக்குறைந்த அமைப்புக் குறியீடுகளுடன் பேருந்துகளின் விபரங்கள் அறிக்கை (Catalogue) மாத்திரம் ஒப்பிடுதல் இடம்பெற்றிருந்தது. அந்த தகவல்களுக்கமைய பேருந்துகளின் அமைப்புக் குறியீடுகளுடன் திருப்தி கொள்ள முடியாதென்பதும், பாராளுமன்றத்திற்கு வருகைதரும் வெளிநாட்டு பிரதிநிதிகளின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளுக்காக அந்த பேரூந்துகள் பொருத்துவதில்லை என்பதும் குறிப்பிடப்பட்டு அந்த விலைக்கேள்விகளும் நிராகரிக்கப்பட்டிருந்தன. 02 வளிச்சீராக்கப்பட்ட பேருந்துகளை கொள்வனவு செய்வதற்காக மீண்டும் விலைக்கேள்வி கோருவதற்கு 2017 மே 08 ஆந் திகதி பெறுகைகள் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(v). கூட்டுத்தொகை முறையே ரூபா 23,089,266 மற்றும் ரூபா 15,525,000 ஆன முதலாவது மற்றும் இரண்டாவது பெறுகைச் சந்தர்ப்பங்களின் போது உரிய நிறுவனங்களுடன் எழுதி கையொப்பமிடப்பட்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கை, அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ), 8.9.3 மற்றும் NPAL Goods/SBD 01 ஆம் இலக்க பதிவேட்டில் காணப்படுகின்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த ஒப்பந்தம் தொடர்பாக பொது ஒப்பந்தப் பதிவாளருக்கு முன்வைத்து விலைக்கேள்வியாளர் மற்றும் உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிராததுடன், பதிவு செய்தமைக்கான சான்றிதலொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பாராளுமன்றத்தின் பதவியணிக்காக சீருடைகளை வழங்குவதற்காக ரூபா 2.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த கொள்வனவு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.5(ஆ) வழிகாட்டிக்கமைய இந்த பெறுகை நடவடிக்கைக்காக பெறுகைகள் கால அட்டவணை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) கொள்வனவின் ஆரம்பத்தில் சீருடைத் துணிகளை கொள்வனவு செய்யும் போது தேவையான துணியின் அளவினை தீர்மானிப்பதற்காக சீருடைக்கு உரித்துடைய பதவியணியை சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டளையிடப்பட்டு 05 மாத தாமதத்தின் பின்னர் சீருடைத் துணிகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய ரூபா 63,604 தொகையான தாமதக் கட்டணங்கள் ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்பட வேண்டியபோதிலும், அவ்வாறு தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 4 வருடக் காலப்பகுதியினுள் பதவியணியின் 151 அங்கத்தவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டிருந்தன. அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்றதாக இருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பாராளுமன்றத்திற்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பாராளுமன்றத்தின் தகவல் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 05 உள்ளக ஈடுபாடுகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய 28 வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) உரிய முறையில் மதிப்பீடுகளை தயாரிக்காது டயர்களை கொள்வனவு செய்தல், உரிய முறையில் களஞ்சியப்படுத்தாமை, இருப்பு தொடர்பில் கவனம் செலுத்தாது கடந்த வருடங்களில் கட்டளையிடப்பட்ட அளவே அடிப்படையாக கொள்ளப்பட்டு இருப்புக் கட்டளையிடல் மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்த இருப்புக்களை உரிய முறையில் அகற்றாமை போன்ற காரணங்களால் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதியில் உள்ளபடியாக 385 டயர்கள், 344 ரியூப்கள் மற்றும் 51 ரிம்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. அந்த டயர்களை இட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய வாகனங்களும், பாராளுமன்றத்தில் இல்லாதிருந்தமையால் பயன்படுத்தப்படாத டயர்களின் எண்ணிக்கை 127, 302 ரியூப்கள் மற்றம் 17 ரிம்கள் கைத்தவிர்க்கப்பட்டிருந்தன. வழங்கல் பிரிவின் களஞ்சியத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கணனி மென்பொருட்கள் 2017 ஆம் ஆண்டு வரையிலும் பயன்படுத்தப்படாமை மற்றும் ரயர்கள் தொடர்பில் இருப்புப் புத்தகங்களில் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டிராமை காரணத்தால் மேற்படி கைதவிர்க்கப்பட்ட டயர்கள், ரியூப்கள் மற்றும் ரிம்களின் இருப்புப் பெறுமதியை கணக்கிட முடியாதிருந்தது.

(ஈ) 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதியளவில் பாராளுமன்றத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட 258 டயர்களின் உத்தரவுக் காலம் கடந்திருந்த போதிலும், அவை வாகனங்களுக்காக பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(உ) 2018 மார்ச் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனைகளின் போது தொலைபேசி பரிமாற்றல் அறையில் இருக்க வேண்டிய பிரதான பணிக்கூட்டு கட்டமைப்பிற்குரிய ரூபா 267,900 பெறுமதியான MP Envy 13 Care 17 ஆம் இலக்க மடி கணனி அங்கு இருக்கவில்லை.

(ஊ) பாராளுமன்றத்தில் அமைந்துள்ள 12 மின்தூக்கிகளின் பழுதுபார்த்தல்களுக்காக பயன்படுத்தப்படும் 201 வகைகளிலான 3,871 அலகுகளுடனான உதிரிப்பாகங்கள், பொறியியல் பிரிவின் களஞ்சியத்தில் காணப்பட்டன. மின்தூக்கி சேவைப்படுத்தல் நிறுவனத்தினால் பழுதுபார்த்தல்களுக்கு தேவையான உதிரிப்பாகங்கள், பொறியியல் பிரிவின் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டு மீண்டும் மீளளிப்பு செய்யப்படுகின்றமையால் ஆரம்பத்தில் நிலவிய உதிரிப்பாகங்களின் இருப்பானது 2018 யூலை 04 ஆந் திகதி வரையிலும் வேறுபடாது காணப்பட்டது.

## 2.4 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 94(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 09 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் பயன்பாட்டின் பின்னரான சேமிப்பானது ரூபா 7.54 மில்லியனை மிகைத்து பொறுப்புக்கள ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 602,107 கூட்டுத்தொகையான பொறுப்புகள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சேதங்கள் தொடர்பான பொறுப்பு

மீளாய்வாண்டின் போது பாராளுமன்றத்திற்கு சொந்தமான வாகனங்கள் 11 சந்தர்ப்பங்களில் ரூபா 3.18 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த சேத நட்டங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 மற்றும் நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது

புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கே மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பாராளுமன்றத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிராத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறு

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய வியடம் |
|---|---|---|
| **வருடம்** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 3.2(அ) | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 5.3(அ)(v) | 2008 மே 02 ஆந் திகதிய டீஎம்எஸ்/சீ/4/பீ/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் கடிதத்திற்கமைய 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் ஆலோசனைக்கமைய நிறுவனத்தை மீள்கட்டமைப்பு செய்தல் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 2013 | 1.6(அ)(i) | அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக 10 சம்பள ஏற்றங்கள் பாராளுமன்றத்தின் பதவியணிக்கு வழங்கப்பட்டிருந்தது. |

### 2.7 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு மற்றும் கடந்த ஆண்டினுள் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2016** | மீண்டுவருபவை | 1,857 | 1,816 | 41 | 2.21 |
| | மூலதனம் | 580 | 336 | 244 | 42.06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **2,437** | **2,152** | **285** | **11.69** |
| **2017** | மீண்டுவருபவை | 2,482 | 2,444 | 38 | 1.53 |
| | மூலதனம் | 523 | 398 | 125 | 23.90 |
| | **மொத்தம்** | **3,005** | **2,842** | **163** | **5.42** |

மீளாய்வாண்டிற்குரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மற்றும் அவற்றை பயன்படுத்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 17 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களின் நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான மீதியானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) துறை ரீதியான செயற்குழு உள்ளடங்கலாக பாராளுமன்றத்தை நவீனமயப்படுத்துவதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களினூடாக ரூபா 100 மில்லியனான நிதியேற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றுள் எவ்வித பயன்பாடுமின்றி அந்த மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

பாராளுமன்றத்திற்குரிய 01601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 39.00 | 38.43 | 30.00 | 31.31 | 175.00 | 130.57 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளபடியான இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர்ந்த அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,883,013 ஆக இருந்தது. இந்த நிலுவை மீதிகள் 01 முதல் 22 வருடங்களுக்கு மேற்பட்ட கால வீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு பாராளுமன்றம் தவறியிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முற்பணக் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 50,147 ஆன வேறுபாடொன்று நிலவியது.

**2.9 பொது வைப்புக் கணக்கு**

பாராளுமன்றத்தின் கீழான 03 வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7.73 மில்லியன் ஆகும். அவற்றுள் 6000/000/00/0016/0040/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதியானது ரூபா 1,820,001 ஆக இருந்த போதிலும், அதற்காக பொது வைப்புப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**2.10 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

பாராளுமன்றத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய நிதிப்பிரமாணம் |
|---|---|---|
| (i) | பொருட் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 454(1) |
| (ii) | மோட்டார் வாகனப் பட்டியல் | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1647(உ) |
| (iii) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 1,063.65 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 75 | 73 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 163 | 148 | 15 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 253 | 220 | 33 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 518 | 494 | 24 |
| (v) | அமைய / ஒப்பந்தம் /தற்காலிக | 6 | 5 | 01 |
| | **மொத்தம்** | **1,015** | **940** | **75** |

மீளாய்வாண்டின் போது பாராளுமன்றத்தின் பதவியணி 843 பேரில் 487 பேரை பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின்போது அவர்களுள் 470 உத்தியோகத்தர்கள் ரூபா 3,285,719 தொகை செலவிடப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.